Sri **MANAKULA VINAYAGAR**

Medical college and Hospital

*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL

*The official podcast of SMVMCH*

**Name of Resource person:**
**Dr. A. Arul Kumaran**

**Podcast Title: World Autism Day**

**Department: Paediatrics**

**Category: (Select relevant category)**
**Public awareness**

**TRANSCRIPT**

வணக்கம்,

நான் டாக்டர்.க.அருள்குமரன். ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி குழந்தைநல பேராசிரியர். உலக ஆட்டிசம் தினத்தை முன்னிட்டு உங்களிடம் ஆட்டிசம் பாதித்துள்ள குழந்தைகள் பற்றி பேச உள்ளேன்.

ஆட்டிசம் என்றால் என்ன? ஆட்டிசம் என்பது மூளையின் செயல்திறனில் ஏற்படும் ஒரு குறைபாடு. இந்த குறைபாடு காரணமாக குழந்தைகளுக்கு மூன்று விதமான பிரச்னைகளை நாம் பார்க்கலாம்.

முதலாவதாக நாம் பார்ப்பது பேச்சுத்திறன். இப்பாதிப்புள்ள குழந்தைகளுக்கு பேசுவதில் சிரமம் இருக்கும். மிகவும் குறைவாக பேசுவார்கள், வயதிற்கு தகுந்த பேச்சு மிகவும் குறைவாக இருக்கும். அது மட்டும் அல்லாமல் non-verbal communication
அதாவது தன் தேவைகளை கூட கைகளை உயர்த்தி சுட்டி காட்டி கூற மாட்டார்கள். பேசும் பொழுது கூட ராகம் குறைவாக இருக்கும். Echolalia என்ற அறிகுறி பொதுவாக காணப்படும். Echolalia என்றால “உன் பெயர் என்ன?” என்று கேட்டால் “உன் பெயர் என்ன” என்று சொல்வார்கள், எங்க போற? என்று கேட்டால் “எங்க போற”என்று சொல்வார்கள். கேள்விக்கு தகுந்த பதில் இருக்காது. பேசுவதிலும் குறை தன் தேவைகளை கூட கைகளை உயர்த்தி சுட்டி காட்டுவதிலும் குறை. இதை முக்கிய அறிகுறியாக ஆட்டிசம்-ல நாம பாக்கலாம்.

இரண்டாவது பொது அறிகுறியாக நாம் பார்ப்பது Repeated behaviours, அதாவது தன் உடம்பையோ தன் கைகளையோ உயர்த்தி எப்பொழுதும் ஆட்டிக்கொண்டே இருப்பார்கள். இதை வேற விதமாகவும் நாம் பார்க்கலாம். எப்பொழுதும் ஊஞ்சல் ஆடிக்கொண்டே இருப்பது, அல்லது மாடி படி ஏறி இறங்கிட்டே இருக்கிறது இல்ல எப்போதுமே toes ல நடப்பது tiptoe walking னு சொல்லுவாங்க. இது மாதிரி repeated behaviours அவர்களுக்கு பொதுவாக தெரியலாம். பேசுவதில் கூட பார்த்தீங்கனா எதோ அர்த்தம் இல்லாமல் ஒரு சில வார்த்தைகளை மட்டும் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருப்பாங்க. இதை இரண்டாவது பொது அறிகுறியா நாம பார்க்கலாம்.

மூன்றாவது, அவர்களுக்கு social and communication problem, அதாவது மற்றவர்களுடன் பழகுவதில் தொடர்பு மிக குறைவாக இருக்கும். எப்பொழுதும் ஒரே விதமான பொருளை வைத்து விளையாடி கொண்டிருப்பார்கள். நம்ம கூப்பிட்டாலும் சில நேரங்களில் திரும்பி பார்க்க மாட்டாங்க. கண்களை பார்த்து பேச மாட்டார்கள். சொப்பு ஜாமான் வைத்து விளையாடுவது, நிலாவுக்கு சோர் ஊட்டுவது இது மாதிரியான கற்பனைத்திறன் கொண்டு விளையாடும் விளையாட்டுகளில் (pretend play) ஈடுபாடின்றி இருப்பார்கள். ஒரே இடத்துல அதே மாதிரி பொம்மையை வைத்து விளையாடிக்கொண்டே இருப்பார்கள். இதுவே அவர்களுக்கு மிக முக்கியமான அறிகுறியாக நம்மிடம் கூட்டிட்டு வருவார்கள்.

இந்த மூன்று பிரச்னைகளை தான் ஆட்டிசம் ல நாம் பார்க்க முடியும். ஆட்டிசம் என்பது ரத்த பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க இயலாது. இதைப்போன்று மேற்கண்ட அறிகுறிகளை வைத்துதான் கண்டுபிடிக்க முடியும். 18 மாதத்திற்குள் ஆட்டிசம் பாதித்த குழந்தைகளை கண்டறிவது மிக மிக அவசியம். அதற்கேற்றவாரு சிகிச்சை முறைகள் நாம் அளிக்க வேண்டும்.

சிகிச்சை முறைகள் என்று பார்த்தீங்கன்னா மூன்று விதமான சிகிச்சைகள் உள்ளன.

1. நடத்தை சீராக்க பயிற்சி (Behavioural therapy)
2. உடல் இயங்குத்தொழில் பயிற்சி (Occupational therapy)
3. பேச்சு பயிற்சி மற்றும் புலன் ஒருங்கிணைப்பு சிகிச்சை (Speech and Sensory integration therapy)

இது எல்லாமே பார்த்தீங்கன்னா ஒரு ஒரு குழந்தைக்கும் தகுந்தவாறு மாறுபடும். எல்லா அறிகுறிகளும் எல்லா குழந்தைகளுக்கும் இருக்காது. எனவே சிகிச்சையாளர் எந்த சிகிச்சை தேவையோ அதற்கேற்றவாறு சிகிச்சை அளிப்பார்கள். இதை போன்று பாதிப்புள்ள குழந்தைகளுக்கு நாம் ஆரம்பக்காலத்திலே கண்டறிந்து சிகிச்சை முறைகள் அளித்து கல்வி வகுத்து அவர்கள் மென்மேலும் மக்களோடு மக்களாக வாழ நாம் வழிவகுக்க வேண்டும்.

ஆட்டிசம் குழந்தைகளை ஆதரிப்போம் அவர்கள் திறமையை அடையாளம் காண்போம்

நன்றி வணக்கம்!!

Signature of the Resource Person

Signature of the HOD

Dr.A.ARUL KUMARAN,M.D.,
Reg No.66924
PROFESSOR
DEPARTMENT OF PAEDIATRICS
Sri Manakula Vinayagar Medical College and Hospital
Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry-605 107.